செய்தி வெளியீடு எண் :1015 நாள்: 22.06.2022

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி, புதுடெல்லியில் இன்று (22.06.2022) மாண்புமிகு தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு சட்டமன்ற அனைத்துக்கட்சி தலைவர்களின் குழு ஒன்றிய அரசின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் செகாவத் அவர்களை சந்தித்து காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது அணை குறித்து விவாதிக்கக் கூடாது என்றும், கர்நாடகா அரசு மேகதாது அணை கட்டக்கூடாது என்பதையும் வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினர். பின்னர் ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சருடன் தமிழக குழுவினர் மேகதாது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். பழனிமாணிக்கம், திரு. வைகோ, முனைவர் மு. தம்பித்துரை, திரு. ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோ.க. மணி, திரு. கு. செல்வப்பெருந்தகை, திரு. எஸ்.எஸ். பாலாஜி, திரு. நயினார் நாகேந்திரன், திரு. தி. இராமசந்திரன், திரு. பி. சண்முகம், திரு. எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. தி. வேல்முருகன், திரு.எம். ஜெகன்மூர்த்தி மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/தலைமை உள்ளுறை ஆணையர் முனைவர். அதுல்ய மிஸ்ரா,இ.ஆ.ப., நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். சந்தீப் சக்சேனா.இ.ஆ.ப., உள்ளுறை ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., காவேரி தொழில் நுட்பக் குழு மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கூட்டத்திற்கு பிறகு, மாண்புமிகு தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது** :

"மாண்புமிகு ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் செகாவத் அவர்களுடன் பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது. மேகதாது பற்றி காவிரி நதிநீர் ஆணையம் விவாதிக்கக்கூடாது என்பதே எங்களது முக்கிய கோரிக்கையாக இருந்தது. மேகதாது பற்றி பேசுவதற்கு நதிநீர் ஆணையத்திற்கு எவ்வித அதிகார வரம்பும் இல்லை என்று நாங்கள் குறிப்பிட்டோம். ஆனால், அவர்களுக்கு உரிமை உள்ளது என வழக்கறிஞரிடம் கருத்து பெற்றுள்ளனர். அதேபோல் நாங்களும் சட்ட வல்லுநர்களிடம் கலந்து ஆலோசித்ததில் அந்த கருத்து சரியானதல்ல என தெரிவித்தோம். மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு முயற்சிப்பது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்பதை வலியுறுத்தினோம்.

மாண்புமிகு ஒன்றிய அரசின் ஜல்சக்தி துறை அமைச்சர் அவர்கள் எங்களிடம் முன்னரே பலமுறை உறுதி அளித்துள்ளபடி, தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமல் காவிரியில், கர்நாடக அரசு எந்த ஒரு அணையும் கட்ட முடியாது என்ற கருத்தை அவர்கள் உறுதி செய்துள்ளார்."– என தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in